[1979 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் இரண்டாவது துணைக் கேள்வியை கேட்டுத்தான் ஆகவேண்டும் என்பதற்காக சம்பந்தமில்லாத கேள்வியை கேட்பது சரியல்ல. அந்த முறையில் இந்தத் துணைக் கேள்வி பொருத்தமானது அல்ல.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, வேண்டுகோள் வந்தால்தான பரிசீலிக்கப்படும் என்ற போக்கே தவறு. நாம் ஒவ்வொருவரும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். நம் கண்ணாலேயே பார்க்கிறோம், குருவிக்காரன்கள் எல்லாம் குப்பைத் தொட்டியிலிருந்து எச்சிலை எடுத்துபொறுக்கி சாப்பிட்டுக் கொண்டிருப்பதை பார்க்கிறேன். இப்படிப்பட்டவர்களை பேக்-வார்டு கிளாஸ்ஸில் தான் வைத்திருக்கிறோம். இவர்களையெல்லாம் ஷெட்யூல்டுடிரைபிலோ அல்லது ஷெட்யூல்டு காஸ்ட் என்ற இனத்திலோ சேர்க்க வேண்டியது மிக முக்கியம். எந்தெந்த ஜாதியினர் இப்படி மிக மோசமான நிலைமையில் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் இந்த ஷெட்யூல்டு கிளாசிலோ அல்லது ஷெட்யூல்டு டிரைபிலோ சேர்க்கவேண்டும் என்று அரசே சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாநில அரசு பலவிதமான விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. யார் யார் கோரிக்கைகளைத் தருகிறார்களோ அவற்றைப் பார்த்து இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்து அனுப்புகிறது. இந்திய அரசியல் சட்டத்தில் இது போன்ற விதிமுறை இருக்கிற காரணத்தால் அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு தான் இந்த அரசு செயல்பட முடியும்.

மடத்துக்குளம் பேரூராட்சி பேருந்து நிலையம்.

வினா எண். 858— திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உடுமலை தாலுக்கா மடத்துக்குளம் பேரூராட்சி முறையாக அமைந்துள்ள பேருந்து நிலையத்தை அங்கீகரிக்கும்படி அரசைக் கேட்டு நீண்ட காலமாகியும் அங்கீகாரம் அளிக்காமலிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் எப்போது அங்கீகாரம் அளிக்கப்படும் ? அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா ?

1979 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) பேருந்து நிலையம் அரசால் அங்கீகரிக்கப்பட வேண்டுமானால் அப்பேருந்து நிலையத்தில் 1940ஆம் ஆண்டின் தமிழ்நாடு மோட்டார் வண்டிகளின் விதிகளில் உள்ள 268ஆம் விதியின்படி குறிப்பிட்ட சில வசதிகள் பொது மக்களுக்காக அமைத்து இருக்க வேண்டும். மடத்துக்குளம் பேரூராட்சி அமைத்துள்ள பேருந்து நிலையம், விதிகளில் குறிப்பிட்டுள்ள எல்லா வசதிகளைக் கொண்டும் அமைக்கப்படவில்லை. இவ் வசதிகளை ஏற்படுத்திய பிறகுதான் மடத்துக்குளம் பேரூராட்சி மன்றத்தினரால் அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் மாவட்டப் போக்குவரத்து அதிகாரியால் அங்கீகரிக்கப்படும். மேற்கண்ட விதியின்படி கூறப்பட்டுள்ள, பேருந்து நிலையத்திற்கான மற்ற வசதிகளையும் அமைக்கும்படி மடத்துக்குளம் பேரூராட்சி மன்ற செயல் அலுவலர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார். அவர் பேருந்து நிலையத்தில் மேலும் வசதிகள் செய்வதற்கு பேரூராட்சியில் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லாததால் தற்சமயம் அவ் வசதிகளைச் செய்ய முடியாத நிலையில் உள்ளதென்றும் அவ்வசதிகள் அடுத்த நிதி ஆண்டில் செய்யப்பட உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

[முற்பகல் 9-40]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மடத்துக்குளம் பேரூராட்சி கிட்டத்தட்ட சின்ன நகரமாக இருக்கிறது. பேருந்து நிலையம் அங்கே கட்டப்பட்டு, நானே கண்ணாலே பார்த்திருக்கிறேன். சிமெண்ட் போடப்பட்டிருக்கிறது; பஸ் நிற்பதற்கு இடமிருக்கிறது; குடிநீர் வசதியிருக்கிறது; போக்குவரத்துக்கு வரக்கூடிய பிரயாணிகள் இருக்கிறார்கள். அப்படி இருந்தாலும், மேற்கொண்டு என்ன வசதி தேவை என்பதற்கு அரசு முயற்சி எடுத்து வசதி செய்ய முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அரசே முயற்சி எடுத்துக் கொள்வதற்கில்லை. காரணம், பேரூராட்சிகள் அவரவர்களுடைய நிதி நிலைமைக்கேற்ப செய்ய வேண்டும். அங்கே இன்னும் பயணிகள் வந்து தங்கக்கூடிய இடம், கழிவிடம் போன்றவைகள் சிறந்த முறையில் இல்லை. அதனால், தாமதமாகிறது. அடுத்த ஆண்டு செவ்வனே செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்கள். எனவே, அடுத்த ஆண்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இதிலிருந்து வேறொரு முக்கிய பிரச்னை எழுகிறது. அங்கே ஏராளமான ஜனங்களின் போக்குவரத்து நெரிசல் இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். கோவை ஜில்லாவையும்,

[1979 ஏப்ரல் 27

மதுரை ஜில்லாவையும் இணைக்கிற பழனிக்குச்செல்லும் 22-வது மைலில்இருக்கிறது. அந்த இடத்தில் ஜனநெரிசல் இருக்கும்போது பிரயாணிகளுக்கு வேண்டிய சவுகரியம் செய்துகொடுக்க, இந்தப் பேரூராட்சிக்குப் போதிய நிதி வசதி இல்லையென்றால், அரசாங்கமே முன்வந்து இதைச் செய்யக்கூடாதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, இந்தப் பேரூராட்சிக்கு மட்டுமல்ல. தமிழகத்திலுள்ள பல பேரூராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்களில், அதோடு பல நகராட்சிகளில் இந்தப் பிரச்னை இருக்கிறது. பல இடங்களில் போதிய சுகாதாரவசதி இல்லாத நிலைமை இருக்கிறது. இதற்குக் காரணம் நிதி நிலைமைத் தட்டுப்பாடு தான். இதைப் போக்குவதற்கு மாவட்ட போக்குவரத்துக் கழகங்களிலே இருந்து வரக்கூடிய லாபத்தில் ஒரு பகுதியை ஆரம்பகட்டமாக எடுக்கும் வகையிலே, 25 இலட்சம் ரூபாயில், ஏற்கெனவே இருக்கின்ற பேருந்து நிலையங்களில் சுகாதார வசதி, ஓய்வு இடங்கள், கழிப்பிடங்கள் ஆகியவற்றை கட்ட இருக்கின்றது. முதலில் கிரேடு 1 முனிசிபாலிடிகளிலும், பின்னால் முனிசிபாலிடிகளிலும் இப்படி படிப்படியாக பேரூராட்சிகளிலும் செய்ய வேண்டுமென்று அரசு ஒரு முடிவெடுத்திருக்கிறது.

மருதை ஆற்றின் குறுக்கே பாலம்.

* வினா எண் 859— திரு. என். பெருமாள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருச்சி மாவட்டம் வரகூர் தொகுதி, ஆலத்தூர்-அரியலூர் சாலையின் இடையில் உள்ள மருதை ஆறு என்ற காட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இல்லை.

திரு. என். பெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, எனது வரகூர் தொகுதியில் சில பஸ்கள் போய்க் கொண்டிருக்கின்றன. அங்கே மருதையாறு இருக்கிறது. அந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டவேண்டும் என்று தொகுதி மக்கள் மகஜர் கொடுத்து, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதை மாநில அரசு கவனித்து, அங்கே பாலம் கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?